# ஸ்ரீ பிரகதாம்பாள் மலர்வழிபாடு
# (அரைக்காசம்மன்)

அன்பே உருவாம் பிரகதாம்பாள் போற்றி
கருந்தார்க் குழலுமை கௌரி போற்றி
மங்கள நாயகி மாமணி போற்றி
எங்கும் நிறைந்த இன்பொருள் போற்றி
இளமை நாயகி எந்தாய் போற்றி
-[5]

வளமை நல்கும் வல்லியே போற்றி
யாழைப்போல் மொழியாயோ போற்றி
பேழை வயிற்றினை பெற்றோய் போற்றி
பால்வள நாயகி பார்ப்பதி போற்றி
சூல்கொண்டு லககெலாம் தோற்றினாய் போற்றி
[10]

அறம்வளர் நாயகி அம்மே போற்றி
மறங்கடி கடைக்கண் மனோன்மணி போற்றி
போகம் ஆர்த்த பொற்கொடி போற்றி
பாகம் பிரியாய் பராபரை போற்றி
உலகுயிர் வளர்க்கும் ஒருத்தி போற்றி
[15]

மலர்தல் குவிதலில் மண மலர் போற்றி
கத்து கடல்வரா முத்தே போற்றி
நத்தும் அடியார் நட்பே போற்றி
கற்றவர்க் கின்பக் கடலே போற்றி
மற்றவர்க் கெட்டா வான்வெளி போற்றி
[20]

சிவகாமியம்மைச் செல்வி போற்றி
புவனப் பொருள்களிற் பொருந்தினாய்ப் போற்றி
வலிதா யத்தமர் வண்தாய் போற்றி
கலிசூழா வகை காப்பாய் போற்றி
வண்டுவார் குழலி மாதா போற்றி
[25]

சென்டா டும்விடைச் சிவையே போற்றி
உண்ணா முலையெம் உயர்தாய் போற்றி
கண்ணார் கழுகு கழுத்தாய் போற்றி
பெருந்துறை அரசி பெண்கனி போற்றி
முருந்தேர் முறுவல் முதல்வி போற்றி
[30]

வேற்கண் அம்மை மீன்கண் போற்றி
நாற்பெரும் பயன்தரும் நங்காய் போற்றி
மின்னொளி அம்மையாம் விளக்கே போற்றி
மண்ணொளி பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
பச்சை நிறத்து பைங்கிளி போற்றி
[35]

இச்சை இசைந்த இன்பே போற்றி
குவளைக் கண்மலர் கொம்பே போற்றி
துவளவண் நீற்றோன் தலைவி போற்றி
பவள வரைமேற் பசுங்கொடி போற்றி
துவளிடை சிறுத்த தூயோய் போற்றி
[40]

குயில்மொழி மிழற்றும் மயிலியல் போற்றி
எயில் மூன் றெரித்த இலங்கிழை போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
வையமீன் றளிக்கும் வளத்தாய் போற்றி
மெய்யுறு தடியர் விருப்பே போற்றி
[45]

பிரகதாம்பாள் நாயகி அன்னாய் போற்றி
தேவிற் சிறந்த திருமகள் போற்றி
தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
அண்டர் அருந்தா அமிழ்தே போற்றி
பணங்காட் டூருறை பவளே போற்றி
[50]

அனங்காட்டும் நடை அழகி போற்றி
தமிழினும் இனிமை சார்ந்தோய் போற்றி
குமிழ்தா மரைமலர் கொழயிடை போற்றி
அமரி குமரி ஆனாய் போற்றி
இமவான் பெற்ற இளையாய் போற்றி
[55]

மலயத் துவசன் மகளே போற்றி
கலையாய்க் கனிந்த தலைமகள் போற்றி
தக்கன் மகளாய்த் தனித்தாய் போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி
அலைமகள் அடிபணி நலமகள் போற்றி
[60]

கலைமகள் தலைபணி கருத்தே போற்றி
திருக்கோகர்ணம் திகழ்வாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதி போற்றி
உயிருள் ஓவிய உருவே போற்றி
செயிரில் காட்சிச் சேயிழை போற்றி
[65]

செந்தமிழ்ப் பாவின் தெளிவே போற்றி
எந்தம் மனத்தில் இருப்பாய் போற்றி
நீலி சூலி நெடுங்கனி போற்றி
மேலை வினைகடி விமலை போற்றி
ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி
[70]

வெளிக்குள் வெளியாய் மிளர்வாய் போற்றி
நீல மேனி வாலிழை போற்றி
கோலக்கொண்டால் நிறத்தாய் போற்றி
மண்முதல் ஐம்பொருள் வளமே போற்றி
பெண் ஆண் அலியுருப் பெற்றோய் போற்றி
[75]

ஆப்பனூர் மேவிய ஆத்தாள் போற்றி
மூப்பிறப் பற்ற முதல்வி போற்றி
எண் குணத் தொருவன் இடத்தோய் போற்றி
பண் கனி மென் சொற் பாவாய் போற்றி
பச்சிளம் பெண்ணாய் பகர்வாய் போற்றி
[80]

எச்சம் யத்தும் இசைந்தாய் போற்றி
யாழிசைப் பண்ணா யமர்ந்தாய் போற்றி
ஏழிறுப் பயனாய் இருந்தாய் போற்றி
அருள்மலி கண்ணுடை அன்னையே போற்றி
மருளினர் காணர் வான்பொருள் போற்றி
[85]

வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை போற்றி
பற்றிலா நற்றவர் பற்றே போற்றி
இழையாய் நம்மை இழைப்பாய் போற்றி
குழையாய் அகத்தைக் குழைப்பாய் போற்றி
திருவானைக்கா மங்கைச் செல்வி போற்றி
[90]

உருவும் திருவும் உடையாய் போற்றி
பெருந்துரை அரசி பெண்கனி போற்றி
அருந்துறைத் தமிழின் அமைப்பொருள் போற்றி
கருநிற ஒளிவளர் கடலே போற்றி
பருவரை மருந்தே பகவதி போற்றி
[95]

சூளா மணியே சுடரொளி போற்றி
ஆளாம் அடியர்க் கருள்வாய் போற்றி
மதுரை அரசியாய் வந்தோய் போற்றி
குதிரைச் சேவகன் கொண்டோய் போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
[100]

பலநல்லனநீ படைத்தருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
பயிர்கள் பயன்தரப் பரிந்தருள் போற்றி
செல்வம் கல்விச் சிறப்பருள் போற்றி
நல்லன் பொழுக்கம் நல்குவாய் போற்றி
போற்றி உன் பொன்னடிப் போது போற்றி
போற்றி புகழ்நிறை திருத்தாள் போற்றி
போற்றி பிரகதாம்பாள் நாயகியே போற்றி போற்றி
[108]

– திருச்சிற்றம்பலம்

அன்னை ஸ்ரீ பிரகதாம்பாள் ஆலய இணையதள முகவரி : www.sreebragadambal.org
(தை மாதத்தில் இயங்கத் துவங்கும்)